# தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
# Tamil Study Centre, Homebush Inc.

**Postal Address: P O Box 4019, Homebush, NSW 2140**
www.tsch.org.au info@tsch.org.au


## பேச்சுப்போட்டி 2020 எட்டாம் வகுப்பு

அனைவருக்கும் வணக்கம்

### சுற்றுச்சூழல்

மனிதனது நல்வாழ்க்கைக்கும் எல்லாவித தேவைகளுக்கும் சூழலே இருப்பிடமாகும். உலகெங்கும் சுற்றுச்சூழல் சீர்கெட்டு பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ளது. உயிரினங்கள் நல்ல நீரையோ, சுத்தமான காற்றும் சுகமான வாழ்வையோ நுகரமுடியாதவாறு அவதியுறுகின்றன. எனவே வாழ்க்கையோடு நெருங்கிய தொடர்புடைய சூழலைப் பற்றி சிந்திப்பது மிக அவசியமாகும்.

சுற்றுச்சூழல் மாசுபடுவதற்கு மனிதர்களது நடத்தைகளே பெரிதும் காரணம் ஆகின்றன. இந்நிலை மாறவேண்டும்.

நம்மைச் சூழவுள்ள நிலம், நீர், வளி அனைத்தும் நமது சூழலே. மனிதன் தனது தேவைக்காக இவற்றை மாசடையச் செய்கின்றான். சனத்தொகை பெருகுவதால் அதிகளவு உணவும் வீட்டு வசதியும் தேவைப்படுகின்றது. அதற்காக மரங்களை வெட்டிக் காடுகளை அழிக்கிறான். இதனால் மண் அரிப்பு ஏற்படுவதோடு மழை வளமும் குறைகிறது.

”விசும்பின் துளிவீழி னல்லால்மற் றாங்கே
பசும்புல் தலைகாண்ப தரிது”

என்று மழையின் முக்கியத்துவத்தை வள்ளுவர் கூறுகின்றார். உணவு உற்பத்தியைப் பெருக்கச் செயற்கை உரங்களை விவசாயி உபயோகிக்கின்றான். இது மண்வளத்தையும் நீர்வளத்தையும் மாசுபடுத்துகிறது. போக்குவரத்து சாதனங்கள், தொழிற்சாலைகள் வெளிவிடும் புகை போன்றவற்றாலும் வளி மாசடைகின்றது.

தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுப் பொருட்களை உயிரினங்களுக்கு ஊறு விளையாவண்ணம் சுத்திகரித்த பின் வெளியேற்ற வேண்டும். அல்லாவிடில் நீர் நிலைகளும் நிலமும் மாசுபடுகின்றன.

சூழல் மாசடைவதைத் தடுப்பதற்கு மக்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். ஒவ்வொருவரும் தத்தம் கடமையை உணர்ந்து செயற்பட்டால் சூழல் சுத்தம் அடையும். “சுத்தம் சுகம் தரும்”, “நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்”

என்றெல்லாம் கூறும் நாம் எமது சுக நலன்களை கருத்தில் கொண்டு செயற்படவேண்டும்.

நன்றி
வணக்கம்